This question paper consists of **31** questions and **8** printed pages.

* 8 பக்கங்களை கொண்ட இவ்வினாத்தாளில் **31** வினாக்கள் உள்ளன.

Roll No. | | | | | | | | | | | | |

# தமிழ்
# TAMIL
# (237)

**Code No. 50/S/A/TM**

**SET** **A**

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ……………………………………………………

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : 1. ……………………………………………………

2. ……………………………………………………

**பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **(A, B, C, D)** ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் எண் **50/S/A/TM**, **Set** **A** ஐ விடைத்தாளில் எழுதுங்கள்.



www.cbseportal.com

Download From: http://cbseportal.com

**பொதுக்குறிப்புகள் :**

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **(A, B, C, D)** ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# தமிழ்
# TAMIL
# (237)

கால அளவு : **3** மணி நேரம்] [மொ.மதிப்பெண்கள் : **100**

**குறிப்பு** : (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

**பொருத்தமான விடையை எடுத்து எழுதுக** **1 × 11 = 11**

1. ஓசோன் ஓட்டை எதைத் திறப்பது போல் உள்ளது.

   (A) வாயை (B) வாசலை

   (C) நெற்றிக்கண்ணை (D) ஜன்னலை

2. கரிய செம்மல்

   (A) தசரதன் (B) இராமன்

   (C) வசிட்டர் (D) இலக்குவன்

3. கண்ணுடையர் என்பவர்

   (A) கல்லாதவர் (B) கற்றவர்

   (C) செல்வர் (D) உயர்குடி பிறந்தோர்

4. -------------- கடந்த பின் வரிப்பணம் வாங்க முடியாது

   (A) சுங்கச் சாவடி (B) கோவில்

   (C) அரண்மனை (D) சங்கம்



Download From: http://cbseportal.com

5. எச்.ஜி. வெல்ஸ் எழுதிய நூலின் பெயர்-----------

(A) மேக துாதம்
(B) ஒப்பிலக்கணம்
(C) அர்த்த சாஸ்திரம்
(D) சரித்திர விசேஷம்

6. பகைமை எப்போது மாயும்.

(A) தன்னம்பிக்கையோடு செயல்பட்டால்
(B) தனித்து செயல்பட்டால்
(C) ஒன்றுபட்டு செயல்பட்டால்
(D) ஆயுதங்களோடு செயல்பட்டால்

7. சண்டகாசுரனின் தேரில் உள்ள கொடி இற்று விழுந்த இடம்.

(A) வெற்றியூர்
(B) தேவகோட்டை
(C) தண்ட தேவி
(D) மாளக கண்டான்

8. பிறையும் சடையும் சூடியவர்

(A) திருமலை முருகன்
(B) திருமால்
(C) திருக்குற்றால நாதர்
(D) யானை முகத்தான்

9. தொடர் வண்டிப் பயணத்திற்கானப் படிவத்தில் அதிக பட்சம் --------- பயணிகள் பெயர் இடம் பெறும்.

(A) ஐந்து
(B) ஆறு
(C) எட்டு
(D) நான்கு

10. உயிர்மெய் எழுத்துகள் மொத்தம்

(A) 247
(B) 126
(C) 216
(D) 226

11. இணைச்சொல்

(A) மட மட
(B) வா ! வா ! வா !
(C) இரவு பகல்
(D) படபட



Download From: http://cbseportal.com

www.cbseportal.com

12. கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

மனையியல் என்பது குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்வியை அளிப்பது. வீடும் குடும்பமும் தான் ஒரு நாட்டின் ஆற்றல்களாகும். ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பது குடும்ப வாழ்க்கை. வாழ்க்கையின் குறிக்கோள்களை அமைப்பது வீடு. ஆன்ம வாழ்க்கையைத் தருவது அதன் சூழ்நிலை. எதிர்கால மன்னர்களான குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது வீடு. என்றும் மாறாத இன்பத்தையும் சிதைக்க முடியாத குணத்தையும் அளிப்பது இல்லம். தனி மனிதனுடைய வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் இன்றியமையாயப் பல கூறுகளைக் கொண்ட குடும்பத்தைச் சீர் பெற நடத்தக் கற்பிப்பது மனையியல். கல்வியின் நோக்கங்களில் சிறந்தவையான சமூக உணர்ச்சி, ஒழுக்கம் மன நிறைவு, சுகம், ஒழுங்கான குடும்ப வாழ்க்கை, தொழில் திறமை, ஓய்வு நேரத்தை வளம் படப் பயன்படுத்துதல் ஆகியவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டது மனையியல். ஆகவே மனையியலும் கல்வியும் ஒன்றேயாகும்.

**வினாக்கள்**

(1) மனையியல் எதைக் கற்பிக்கும் ? **3**

(2) கல்வியின் நோக்கங்கள் யாவை ? **3**

(3) ஒரு நாட்டின் ஆற்றல்கள் என்னென்ன ? **2**

(4) வாழ்க்கையின் குறிக்கோள்ளை அமைப்பது எது ? **1**

(5) எதிர்கால மன்னர்களை உருவாக்குவது________ **1**

(6) இல்லம் எவற்றையெல்லாம் தருகிறது ? **2**

13. பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

கொலை மறுக்கும் வீரதீரக்
கொள்கை சொல்லும் பொன்மொழி
கொடியவர்க்கும் நன்மை செய்யக்
கூறுகின்ற இன்மொழி
அலை மிகுந்த வறுமை வந்தே
அவதியுற்ற நாளிலும்
ஐயமிட்டே உண்ணுகின்ற
அறிவு சொல்லும் தமிழ்மொழி;
கலைமிகுந்த இன்ப வாழ்வின்
களிமகுந்த பொழுதிலும்
கருணை செய்தல் விட்டிடாத
கல்வி நல்கும் மொழியிது;
நிலைதளர்ந்து மதிமயங்க
நேருகின்ற போதெல்லாம்
நீதி சொல்லி நல்லொழுக்கம்
பாதுகாக்கும் தமிழ்மொழி



Download From: http://cbseportal.com

**வினாக்கள்**

(1) தமிழைப் பொன்மொழி என்று சொல்லக் காரணம் என்ன ? **2**

(2) தமிழ் அறிவு மொழியாவது எங்கனம் ? **1**

(3) தமிழ்க் கல்வி தரும் மொழி என்பதை விளக்குக. **1**

(4) மனித ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் மொழி என்று கூறுவது எதனால் ? **2**

14. அறம் செய்தவர் செல்லும் இடம் யாது ? **1**

15. ஏக்கறுதல் என்றால் என்ன ? **1**

16. நாவல் என்றால் என்ன ? **1**

17. தென்னாப்பிரிக்காவில் யார் தலைப்பாகை அணியக் கூடாது ? **1**

18. தமிழில் மொழி பெயர்க்க. **1**

(அ) Bus stand

(ஆ) Ticket

19. (அ) சேர்த்து எழுதுக. **4 × ½ = 2**

(i) உலகு + இன்புறல் (ii) வாழும் + உயிர்க்கு

(iii) சகடம் + கால் (iv) வினை + உலப்ப

(ஆ) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு சொற்களை எழுதுக. **2**

(1) மை (2) தை

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. **2**

(1) காந்தி --------- நாளும் காமராசர் இறந்த நாளும் ஒன்று.

(2) மாலையில் கதிரவன் மறைவான்; சந்திரவன்-------------

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. **2**

(1) சகளர் (2) வனம்

(3) எயிறு (4) செறிவு



www.cbseportal.com

Download From: http://cbseportal.com

20. பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. **2**

(1) கை கழுவுதல்

(2) முளையில் கிள்ளுதல்

21. திட்ட உறுப்பினர்கள் யார் ? **1**

22. உமது பகுதியில் நடைபெற்ற அரசு பொது மருத்துவமனை திறப்பு விழா குறித்து குறிப்புரை எழுதுக. **4**

23. கல்வியின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவனற்றை தொகுத்து எழுதுக. **5**

24. புகைபிடித்தல் தீங்கு தரும் என்பது குறித்த அறிவிப்புத் தருக. **5**

**(அல்லது)**

காசநோயினை விலக்குதல் பற்றிய விளம்பர அறிவிப்புத் தருக.

25. (அ) பனி - பணி பொருள் வேறுபாடு கூறி அவற்றை தொடரில் அமைத்து எழுதுக. **2**

(ஆ) பிளிறுதல் - கனைத்தல் - இவை எவ்விலங்குகளுக்குரிய ஒலிகளாகும் ? **2**

26. பள்ளி தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக வெளியிடப்படும் மலருக்காக வரவேற்கப்படும் படைப்புகள் குறித்துத் தகவல் பலகையில் இடம் பெறும் செய்திகள் குறித்து ஒரு அட்டவணை தயாரிக்க. **5**

**(அல்லது)**

வங்கியில் பணம் செலுத்தும் படிவத்தைப் பூர்த்தி செய்க.



Download From: http://cbseportal.com

www.cbseportal.com

**திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி லிட்......**
**திருநெல்வேலி**
**நாங்குநேரி கிளை**

| விபரம் | ரூ | பை |
|---|---|---|
| 1000 × ---- | ---- | |
| 500 × ---- | ---- | |
| 100 × ---- | ---- | |
| 50 × ---- | ---- | |
| 20 × ---- | ---- | |
| 10 × ---- | ---- | |
| 5 × ---- | ---- | |
| காசுகள் | | |
| காசோலை/ டிராப்ட் | | |
| கூடுதல் | ---- | |

தேதி:(அ) ________

ரூபாய்:(ஆ) ________

திரு/திருமதி(இ) ______________________________

______________________________

__________ உடைய சேமிப்பு கணக்கில் வைப்பதற்காக

ரூபாய்(ஈ) ______________________________

______________________________

சேமிப்பு கணக்கு எண்(உ) ______________

செலுத்துனர்: (ஊ) ______

காசோலை / டிராப்ட் எண் : ______ காசாளர் எழுத்தர் மேலாளர்

______ ______ ______

**குறிப்பு:** [187642 என்பதை வங்கிக் கணக்கு எண்ணாகவுடைய கண்ணன் / கமலா ஐந்து 500 ரூபாய் தாள்களையும் ஒரு 100 ரூபாய் தாள்களையும் மூன்று இருபது ரூபாய் தாள்களையும் இரண்டு பத்து ரூபாய் தாளையும் 22.11.2014 அன்று வங்கியில் செலுத்துவதாகக் கொள்க.]

27. தீய பழக்கம் உள்ளவர்களிடமும் நல்ல குணம் இருக்கும் என்பதை 'சங்குத் தேவன்' கதாபாத்திரம் மூலம் விவரிக்கவும். **5**

**(அல்லது)**

தென்னாப்பிரிக்க இந்தியருக்காக காந்தி ஆற்றிய தொண்டினை விவரிக்க.



www.cbseportal.com

Download From: http://cbseportal.com

28. பிழை திருத்தம் செய்க. **5**

(1) விறுந்தும் மருந்தும் மூன்று வேலைகள்.

(2) மைல் ஆடியது.

(3) வாலு ! வாள விடு !

(4) வன்டுகள் மளரை மொய்த்தது.

(5) கூடி வால்வது கோடி நண்மை தரும்.

29. விளையாட்டுப் போட்டிகளில் அதிகப் பரிசுகள் பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. **7**

**(அல்லது)**

வேலை வாய்ப்பு வேண்டி தனியார் நிறுவனத்திற்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

30. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை விளக்கி நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. **5**

(1) கேடில் விழுச் செல்வம்.

(2) நான் இரசித்தப் புத்தகம்.

(3) கிராம முன்னேற்றம்

31. இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. **10**

(1) நூலகத்தின் அவசியம்.

(2) உடலோம்பல்.

(3) நான் விரும்பும் கவிஞர்.



Download From: http://cbseportal.com